**ஜா - எல நகர சபை**

**கம்பஹா மாவட்டம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 29 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 2013 ஒக்டோபர் 25 ஆந் திகதி சபைத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 அபிப்பிராயம்**

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட சிறந்த தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் ஜா - எல நகர சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியுள்ளது என்றும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்படும் எனது அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த காரணிகளால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஜா - எல நகர சபையின் செயலாற்றுகை தொடர்பான நிலவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அச்செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகளையும் காசுப்பாய்ச்சல் கூற்றையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட மூலப்பணமான ரூபா 800,000 தொகை பெறவேண்டிய பணக் கணக்கிற்கு செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக நிலுவைக் கடை வாடகைக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) பெறவேண்டிய வியாபார வளாகம் வாடகைக்கு வழங்கப்படும் கட்டணம் ரூபா 223,459 ஆன போதிலும் ரூபா 777,140 தொகை செலவு மீதியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) பெறவேண்டிய பொதுச் சந்தை வாடகை ரூபா 1,576,898 தொகையான போதிலும் ரூபா 329,121 தொகை செலவு மீதியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

(அ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2013 யூன் 31 ஆம் திகதி வரையில் 19 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்விற்கு தகவல்களைச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ரூபா 76,100,915 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்படும் 07 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 42,828,903 ஆக இருந்ததுடன் அதற்குரிய துணைப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளின் படியான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 43,309,115 ஆக இருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 122,457 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 183,700 ஆக இருந்தது.

### 2.2 வங்கிக் கணக்குகள்

(அ) மக்கள் வங்கி நடைமுறைக் கணக்கில் நாளாந்தம் ரூபா 04 மில்லியன் தொகைக்கு மேலான தொகை ஓர் ஆண்டு முழுவதும் வைத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதனை வட்டி வருமானம் ஈட்டப்படக்கூடிய வகையில் நிலையான வைப்பில் முதலீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கில் ரூபா 580,530 மில்லியன் தொகையான மீதி 2011 ஏப்ரல் மாதம் முதல் விளைவற்றுக் காணப்பட்டது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பவை பற்றிய தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரியும் வரியும் | 14,455 | 13,891 | 16,274 |
| (ii) | வாடகை | 11,605 | 8,785 | (777) |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 376 | 337 | 121 |
| (iv) | ஏனைய வருமானம் | 29,012 | 15,292 | 2,763 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மதிப்பீட்டு மீதியுடன் ஒப்பிடப்படுகையில் மீளாய்வாண்டின் போது 4% வீதவரியும், 24% வாடகையும், 10% அனுமதிப்பத்திரக் கட்டணமும் 47% ஏனைய வருமானமும் குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) வாடகை வருமானமாக அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 223,459 தொகையான போதிலும் கணக்குகளில் ரூபா 777,000 தொகையான செலவு மீதியாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.3.2 வீதவரி**

ஆதனங்கள் தடை செய்யும் அதிகாரியால் நிலுவை வீதவரிச் சேகரிப்பின் முன்னேற்றம் மிகவும் குறைவான நிலையில் காணப்பட்டது. நிலுவையான வீதவரி அறவிடப்படுவதற்காக நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 அதிகாரம்) 170(2) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 வியாபார வரி வருமான சேகரிப்பு**

2012 ஆம் ஆண்டிற்கு உரித்தான வியாபார வரிக்காக விண்ணப்பங்களை வழங்கி அவ் விண்ணப்பங்களை மீளச் சேகரித்தல் தொடர்பாக முறையான நடைமுறை ஒன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. விண்ணப்பங்களை வழங்குவது வருமான சேகரிப்பாளர்களால் மேற்கொள்ளப்பட்ட போதிலும் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றை மீளச் சேகரித்தல் தொடர்பாக எழுத்து மூல சான்றுகள் எதுவும் பேணப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்**

2012 ஆம் ஆண்டிற்கு உரித்தாக வியாபார அனுமதிப்பத்திரப் பதிவேடுகளிலிருந்து பெறப்பட்ட அனுமதிப்பத்திர வருமானத்தை மாத்திரம் பதிவு செய்திருந்ததுடன் பெறவேண்டிய அனுமதிப்பத்திர வருமானம் பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. நகர சபை அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் வியாபார அனுமதிப்பத்திரத்தைப் பெறவேண்டிய வியாபார நிலையங்கள் மற்றும் வியாபார அனுமதிப்பத்திரங்களைப் பெற்றிராத வியாபார நிலையங்கள் தொடர்பாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 வெளிப்படையான முறைகேடுகள்**

சபையின் மூன்று உத்தியோகத்தர்களால் போலியாக ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு ஆறு ஊழியர்களின் பெயரில் ரூபா 1,060,700 தொகை இடர் கடனாகப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் பின்னர் கடன் தொகை மீளச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் இதற்கு உரித்தான வட்டி அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் இம் மூன்று உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு ஏற்ற வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராததுடன் இருவர் இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ளனர்.

## 2.5 திண்மக் கழிவு முகாமைத்துவம்

2008 யூலை 30 ஆம் திகதிய 1560/6 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள 2008 இன் 01 ஆம் இலக்க திண்மக் கழிவு முகாமைத்துவ விதி'' சகல உள்ளூராட்சி நிறுவகங்களும் செயற்படுத்த வேண்டும் என 2010 திசெம்பர் 21 ஆம் திகதிய எல்ஜீடீ/05/08/பொது/ வெலும மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரின் (மேல் மாகாண) கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் நகர சபை அவற்றை அமுல்படுத்தியிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது இது தொடர்பாக வருமானம் மதிப்பிடப்பட்டிராததுடன் செலவினமாக ரூபா 10,797,000 தொகை மதிப்பிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக பின்வருமாறு பெறவேண்டிய வருமானம் நகர சபைக்கு பெறப்பட்டிருக்கவில்லை.

(அ) விதிக் கோவையின் 18(1) ஆம் இலக்கத்தின் படி உரிய உள்ளூராட்சி நிறுவகத்திற்குச் செலுத்தப்படும் வரிக்கு மேலாக, குப்பைகளை வீடுவீடாகச் சென்று சேகரிக்கும் செலவினத்தைத் தீர்ப்பதற்காக அதன் 1 ஆம் பட்டோலையில் உள்ள பயன்பாட்டுக் கட்டணத்தை நகர சபை அறவிட்டிருக்கவில்லை.

(ஆ) விதி இல. 09 இன் படி நகர சபை தனது 3 ஆம் பட்டோலையில் விதந்துரைக்கப்பட்டவாறு குப்பைகளின் அளவுக்கேற்ற வகையில் கட்டணத்தை அறவிட்டிருக்கவில்லை.

(இ) விதி இல. 20 இன் படி நிர்மாணிப்பு கழிவுப் பொருட்கள் மற்றும் சேதமடைந்தவற்றின் சேகரிப்புகளுக்காக அறவிடப்பட வேண்டிய கட்டணம் எதுவும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இதன் படி விதி இல. 21 இல் உள்ள ''இடத்திற்கான தண்டப்பணம்'' அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) விதி இல. 22 இன் படி திண்மக் கழிவு வருமானத்தில் 20மூ அளவு கழிவுப் பொருட்கள் கழிவு முகாமைத்துவ அதிகாரசபை நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இவ் விதிக் கோவையின் 54 ஆம் விதியின் படி திண்மக் கழிவுகளை அகற்றும் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகள் அவை தொடர்பான அறிக்கை ஒன்றை வைத்திருந்து செயலாளருக்கு ஒப்படைத்திருக்கவில்லை.

## 2.6 செயலாற்றல்

கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத்திட்டத்தின் படி நகர சபையின் செயலாற்றல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி மேற்கொள்ளப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த பின்வரும் விடயங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(i) ஜா- எல நகர சபை வளாகத்தில் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த மகப்பேற்று சிகிச்சை நிலையக் கட்டிடத்தின் மிகுதி வேலைகள் நிறைவேற்றப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு வழங்குதல்.

(ii) ஊருவல்ஒய பக்கச் சுவர் நிர்மாணிப்பு நடவடிக்கைகள்.

(iii) நகர சபை 70 ஆவது ஆண்டு விழாவிற்காக நகர சபை ஆரம்ப காலம் முதல் வாழ்ந்து வரும் நகரஆளுனர்கள் மற்றும் உறுப்பினர்களுக்காகவும், பதவியணிக்காகவும் ஞாபகார்த்தச் சின்னங்களை வழங்கி நகர சபையில் தகவல் கூடம் ஒன்றை ஸ்தாபித்தல்.

(iv) இரண்டாம் பிவிதுருபுர நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வெலிகம்பிட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.7 கூட்டிணைந்த திட்டம்**

2003 யூன் 02 ஆம் திகதிய மற்றும் பீஈடீ/12 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின் படி நிறுவகத்தின் நோக்கும் செயற்பணியும் மேற்கொள்ளப்படுவதற்காக 05 ஆண்டுகளுக்குக் குறைவற்ற காலத்திற்காக கூட்டிணந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.8 உள்ளகக் கணக்காய்வு**

நிறுவகத்தில் போதிய உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) உள்ளகக் கணக்காய்வு
(ஈ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்